அதிகமாக வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆவல். நம்முடைய கோரிக்கை என்பதை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்வதிலே எதற்காவது நான் பதில் சொல்லாமல் விட்டிருந்தால், அவைகள் எல்லாம் குறிப்பேட்டில் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடைய கவனத்திற்கு வரும்என்பதை எடுத்துச் சொல்லி,இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். தற்போது இன்டஸ்ட்ரீஸ் ஃப்ரீ லோன் என்பது பெரிய தொழிற்சாலைகளுக்கும், நடுத்தர தொழிற்சாலைகளுக்கும் மட்டுமே வழங்கப்படுகிறது. இன்டஸ்ட்ரீஸ் ஃபிரீ லோன் என்றால் சேல்ஸ் டாக்ஸிலிருந்து வரி விலக்கு. அதை நலிவுற்ற சிறிய தொழிற்சாலைகளுக்கு நிதி ஆதாரம் பெறுகிற அளவிலே 5 ஆண்டு அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்ட சிறு தொழில்களுக்கு, அந்த சேல்ஸ்டாக்ஸ் மீதான வட்டியில்லாக் கடன் கொடுக்க அரசு முன் வருமா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தெரிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற தொழில்களுக்கு தனியாக ஒரு அமைப்பின் மூலம், இந்த அரசு அந்தந்த தொழில்களை பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, வேண்டிய வகைகளில் உதவி செய்து கொண்டிருக்கிறது, இண்டஸ்ரியல் பிரிவில் ஏற்கனவே லோன் வாங்கித்தான் அவர்கள் தொழில் நடத்திக் கொண்டிருப்பார்கள்.

கோரிக்கை எண் 24—தொழில்கள்.

திருவாளர்கள் பெ.சு. திருவேங்கடம், டி. மணி, எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. சி. பழனிமுத்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 24-தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,15,55,00-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரியத்தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண்.49—தொழிற் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் ப. சுந்தரம், எஸ். இராசாராமன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— ''மானியக் கோரிக்கை எண். 49–தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 38,60,73,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.56 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

* * * * *

பிற்பகல் 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. அறிக்கை அளித்தல்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. க. மீனாட்சிசுந்தரம் எம். எல். சி. அவர்களை பொதுச் செயலாளராகக் கொண்ட தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் தன் 10 அம்சக் கோரிக்கைகளையும், சிறப்புக் கோரிக்கை ஒன்றையும் அரசின் முன் வைத்து அவைகளை அரசு ஏற்றுக்கொள்ள வற்புறுத்தி 30-3-81–லிருந்து மறியல் போராட்டம் நடத்தி வருகிறது. இக்கிளர்ச்சி குறித்து இப்பேரவையில் 4-4-81–ல் ஓர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தற்கும் மேலவையில் 31-3-81–ல் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கும் பதிலளிக்கும் வகையில் பேசியுள்ளேன். அப்போது தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தைத் தவிர பல்வேறு ஆசிரியர் சங்கங்களும் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்குக் கொடுத்துள்ளன என்றும் எல்லா கோரிக்கைகளையும் அரசு தீவிரமாக ஆராய்ந்து நிதி நிலைமைக்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டியுள்ளது என்றும்

கூறினேன். மேலும் ஆசிரியர் நலத்துக்காக பல திட்டங்களை அண்மை காலத்தில் நிறைவேற்றியுள்ள இந்த அரசு, நியாயமான கோரிக்கைகளை ஏற்று ஆணை வழங்கும் என்று ஆசிரியர்கள் நம்பலாம் என்றும், எனவே இத்தகைய போராட்டங்களை கைவிட வேண்டும் என்றும், கேட்டுக் கொண்டேன். ஆனால் ஆசிரியர் மன்றம் தொடர்ந்து போராட்டம் நடத்தி 1,300-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கைதாகியுள்ளனர். இது வருந்தத தக்கது.

கடந்த மூன்று நாட்களாக திரு. மீனாட்சி சுந்தரத்துடனும் அச்சங்கத்தின் மற்ற சில நடவடிக்கைக் குழு பிரதிநிதிகளுடனும் இக்கோரிக்கைகளைக் குறித்து கலந்து பேசினேன். இக கோரிக்கைகளில் அகவிலைப்படி வழங்குதல், ஒரு நபர் குழு அறிக்கையை வெளியிடுதல், ஓய்வு பெறும் அனைவருக்கும் ரூ. 10,000 வழங்குதல், நிறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு ஊக்க உயர்வை மீண்டும் வழங்குதல், மலிவு விலையில் உணவுப் பொருள்களை வழங்குதல், நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி வழங்குதல், போன்ற கோரிக்கைகள் ஆசிரியர்கட்கு மட்டும் அல்லாது எல்லா ஊழியர்களுக்கும் உள்ள பொதுக் கோரிக்கைகள் ஆகும். ஏற்கனவே ஒரு தவணை அகவிலைப்படி 1-12-1980 முதல் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஒரு நபர் குழுவின் பரிந்துரையை ஏற்று சில சலுகைகளையும் அரசு வழங்கியுள்ளது. அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் இச் சலுகைகள் எல்லா ஆசிரியர்களிக்கும் பொருந்தும். அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டுள்ள பகுதிகள் சிலவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு இப்படிகள் வழங்கப்படா மல் விடுபட்டிருப்பின் அரசாணைப்படி வழங்க ஆவன செய்யப் படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையும் 1-6-81 முதல் அரசு ஊழியர்களாக அரசு அறிவித்து அவ்வாறே ஆணை யிட்டுள்ளது. நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர் களை அரசு ஊழியர் ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை பின்னர் பரிசீலிக்கப்படும். பொதுவாக தற்போதுள்ளபடி ஆசிரியர்கள் ஒன்றியத்துக்குள்ளாகவே மாற்றம் செய்யப்படுவர். தேவைப் பட்டால் மாவட்ட அளவிலோ அல்லது மாநில அளவிலோ மாற்றப்படலாம்.

தமிழ்நாடு மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறு வனம் நடத்தி வரும் திட்டப்படி பயிற்சி பெற்று இடைநிலை ஆசிரியர் தகுதி பெற வேண்டிய இளநிலை ஆசிரியர்கள் ஏறத் தாழ 75,000 பேர் உள்ளனர் என்றும், தற்போதுள்ள ஆணை யின்படி ஆண்டொன்றுக்கு 5,000 இளநிலை ஆசிரியர்கள் தான் இடைநிலை ஆசிரியர்களாக ஆவதற்கு இயலும் என்றும், இதனை அதிகப்படுத்தி எல்லா ஆசிரியர்களும் இடைநிலை ஆசிரியர்களாக குறுகிய காலத்தில் ஆவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டு